மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய சார்-பதிவாளர் அலுவலகம் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், நம்முடைய தமிழகத்தில் மட்டும்தான் கிட்டத்தட்ட 575 சார்-பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. பெரிய மாநிலங்களாகக் கருதப்படுகிற மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில்கூட 300, 325, 350 என்ற அளவில்தான் சார்—பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. ஆகவே, எதிர்வரும் காலங்களில் புதியதாக சார்—பதிவாளர் அலுவலகங்கள் தொடங்கக் கூடாது என்கின்ற ஒரு கொள்கை முடிவு அரசால் எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

***7366—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்காப் புகழ் பெற்ற மங்கையர்க்கரசி*

2018 மே 30]

புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எளிமையான முதல்வர், வலிமையான முதல்வர் அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்கி, அன்பின் உருவம், அருமை அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், மேற்குறிப்பிட்டுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இட ஒதுக்கீடு கோரி 18—1—2017 அன்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, சேலம் மாவட்டத் துணைப் பதிவாளர் (பால் வளம்) அவர்கள் மூலமாக முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட நிருவாகத்திடமிருந்து இராமநாயக்கன்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் பெற்றுத் தரும்பட்சத்தில், பால் வளத் துறையின் மூலமாகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

முற்பகல் 10-50

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு தங்கத் தாரகை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா எனும் தெய்வத்தை வணங்குகிறேன். விவசாயிகளின் விடிவெள்ளியும், தூத்துக்குடி மக்களிடையே 22 ஆண்டுக் காலமாக இருந்துவந்த கோரிக்கையான, ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டுமென்பதை நிறைவேற்றி, அரசாணை பிறப்பித்த சரித்திர சாதனை நாயகரும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும் சேலம் தந்த தவப் புதல்வருமான, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

அண்ணார் அவர்களையும் வணங்கி, சட்டப் பேரவையில் கேள்வி கேட்க அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, எனது கேள்வியைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு தினமும் 1,600 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தனியார் கட்டடத்தில் மழைக் காலங்களில் போதுமான வசதிகள் இல்லை. கணக்குப் புத்தகங்களைப் பராமரிப்பதற்கும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, 36 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தருகிறோம் என்ற ஒரு நல்ல செய்தியைச் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், துணைக் கேள்வி கேட்பதற்கு முன்பாகவே, நிலம் கொடுத்தால் செய்து கொடுக்கின்றேன் என்று மாண்புமிகு அமைச்சர் சொல்லியிருப்பதுதான் தமிழகத்தில் நடைபெறுகின்ற நல்லாட்சிக்குக் கிடைத்த நற்சான்று. ஆகவே, அண்ணார் அவர்கள் அதைச் சொன்னதற்கு மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆத்தூர் தொகுதி, அம்மன்பாளையம் ஊராட்சி, காந்திபுரம் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் இயங்கி வருகிறது. ஆத்தூர் தொகுதி மற்றும் கெங்கவல்லி தொகுதிகளிலுள்ள நான்கு ஒன்றியங்களையும் சேர்த்து, தினமும் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, அங்கு பால் குளிரூட்டும் நிலையம் செயல்படுகிறது. இந்த பால் குளிரூட்டும் நிலையத்திற்கு 3 பக்கங்களிலும் சுற்றுச் சுவர் உள்ளது. ஒரு பக்கம் சுற்றுச் சுவர் இல்லாமல் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளதால், அந்த ஒரு பக்கம் சுற்றுச் சுவரைக் கட்டித் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு அண்ணார் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர்

2018 மே 30]

திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள் சுற்றுச் சுவர் வேண்டுமென்று கோரியிருக்கின்ற, ஆத்தூர் தொகுதி, அம்மன்பாளையம் ஊராட்சியில் இயங்கிவரும் பால் குளிரூட்டும் நிலையம், சுமார் 1 இலட்சத்து 45 ஆயிரம் லிட்டர் பாலை தினமும் கொள்முதல் செய்து வருகிறது. அங்கே சுற்றுச் சுவர் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார். சுற்றுச் சுவர் கட்டுவதற்கு அங்கிருக்கின்ற நிலைமை குறித்து சேலம் மாவட்டத்தினுடைய பொது மேலாளரிடம் பேசி, அங்கு சென்று ஆய்வு செய்து, ஒன்றியத்தினுடைய நிதிநிலைமை அல்லது இணையத்தினுடைய நிதிநிலைமைக்கேற்ப, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, இந்த ஆண்டே சுற்றுச் சுவர் கட்டப்பட்டு, அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் பாதுகாக்கப்படும் என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களுடைய தலைமையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், தென் மாவட்டங்களிலே மிகச் சிறப்புக்குரிய மதுரை பால் வளத் திட்ட வளாகத்திலே, சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாலினைக் கொண்டு தயாரிக்கின்ற பொருட்களான ஐஸ் கிரீம், குளிர்பானங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் பல்வேறு திட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்கள். தமிழகத்திற்கு, அம்மா அவர்களுடைய அரசு மிகச் சிறப்புக்குரிய அந்தத் திட்டத்தைக் கொடுத்தது. ஓராண்டு காலமாக அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அறிகிறேன். ஆனாலும், அதை விரைவுபடுத்திட வேண்டும். அந்த பால் வளத் திட்டப் பணி எந்த அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மிகப் பெரிய திட்டமான அந்தத் திட்டம் எப்போது அமலுக்கு, செயல்பாட்டுக்கு வரும் என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

[2018 மே 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அருமை அண்ணன் திரு. இராஜன் செல்லப்பா அவர்களின் கோரிக்கையின்படி, 100 கோடி ரூபாய் செலவிலே மதுரை மாவட்ட பால் வளத் துறைக்கு புதிய Ice cream plant கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு சில வழக்குகள் காரணமாக பணி தொடங்குவதில் காலதாமதமானது. தற்போது, அந்தப் பணி மீண்டும் துவக்கப்பட்டுவிட்டது. அதன்மூலம், மதுரை மாவட்ட மக்களுக்கு அனைத்து வகையான பால் உப பொருட்களும் கிடைக்கின்ற வகையிலே அனைத்து ஏற்பாடுகளும் நல்ல முறையில் செய்யப்பட்டு வருகின்றன. கூடியவிரைவில் நம்முடைய தமிழ்நாடு முதல்வர் அண்ணன் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் தலைமையில், மிகப் பெரிய பிரம்மாண்டமான அளவில் மதுரை மாவட்டத்தில் 100 கோடி ரூபாய் செலவிலான ஐஸ்கிரீம் தொழிற்சாலை மற்றும் UHT நறுமண பால் தொழிற்சாலை தொடங்கி வைக்கப்படும் என்ற நல்ல செய்தியைச் சொல்லி, விரைவாக அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற தகவலையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 88 மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

88—

தொழிற்பேட்டை

***1191—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?